## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

## EA.No.31/2025 in EP.No.3/2023 in RLTOP No.1/2020

2026 –ம் ஆண்டு ஜனவரி மாதம் 23 –ம் நாள் மனுதாரர் தரப்பு சாட்சியின் ம.சா.1 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு. R. சீனிவாசன், Bench Clerk (Gr–III) அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**நாள் : 23.01.2026**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. ரமேஷ் (PW–1 ) | வயது | : | 59 /2026 |
| க/த பெயர் | : | திரு. சண்முகம் | தொழில் | : | சுயதொழில் |
| முகவரி | | திருச்சி | வட்டம் | : | திருச்சி |

**1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) நான் 19.12.2023 இல் தான் தாவா சொத்து சம்பந்தமாக பொது அதிகார ஆவணம் வாங்கினேன் என்றால் சரிதான். பொது அதிகார ஆவணம் சொத்தின் புல எண்.1801/1 என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் வில்லங்க சான்றானது புல எண்.1801/1 க்கான புல எண் என்றால் சரிதான். **(அந்த வில்லங்க சான்றின் கணினி நகல் எ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**.
2) ம.சா.ஆ–3 ஆவணமான வில்லங்க சான்றானது 2023 மற்றும் 2024 இல் எடுக்கப்பட்டது என்றால் சரிதான். ம.சா.ஆ.1 ஆவணமான வழக்குரையானது ஆவண எண்.576/1976 செல்லாது என்று தாக்கல் செய்யப்பட்ட வழக்கு என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் கிரய பத்திரத்தின் ஆவண எண்.576/1976 என்றால் சரிதான். **அந்த கிரய பத்திரத்தின் நகலானது (அசலோடு ஒப்பீடு செய்யப்பட்டது) எ.சா.ஆ–2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**
3) எ.ம.சா.ஆ–1 ஆவணமானது 23.01.2026 இல் எடுக்கப்பட்டது என்றால் சரிதான். எ.ம.சா.ஆ–1 ஆவணமான வில்லங்க சான்றிதழில் கிரய ஆவண எண்.576/1976 ஆனது சம்பத்குமார் நாராயணசாமிக்கு எழுதி கொடுக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், 30 ஆண்டுகளாக வில்லங்க சான்றிதழில் எந்த பதிவும் இல்லை. எ.ம.சா.ஆ–2 ஆவணமானது தவறானது.
4) 30 ஆண்டுகளாக வில்லங்க சான்றிதழில் எந்த பதிவும் இல்லை, எ.ம.சா.ஆ–2 ஆவணமானது தவறானது என்று நான் எவ்வாறு சொல்கிறேன் என்றால் சம்பத்குமார் இதே சொத்தை 1991 இல் விற்பனை செய்தபோது இந்த வழக்கின் எதிர்மனுதாரர் ஆட்சேபணை செய்யாததால் தவறானது என்று சொல்கிறேன்.

எ.ம.சா.ஆ–2 ஆவணமான கிரய பத்திரம் சம்பத்குமார் விற்பனை செய்த விபரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது.

5) ம.சா.ஆ.2 ஆவணமான பொது அதிகார பத்திரத்தில் 2023 க்கு முன்பு சர்வே எண்.1801/1 சொத்து குறித்த விபரங்கள் தெரியவந்தது என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. சர்வே எண்.1801/1 சொத்து குறித்த விபரங்கள் அனைத்தும் 2023 க்கு பின்புதான் எனக்கு தெரியவந்தது என்றால் ஆமாம். சம்பத்குமார் எந்த வித ஆவணமானமும் எழுதி வைக்காத காரணத்தால்தான் ம.சா.ஆ.2 ஆவணம் பொது அதிகார ஆவணம் எனக்கு எழுதி கொடுக்கப்பட்டது என்றால் சரிதான்.

6) சம்பத்குமார் உயிருடன் இருக்கும் வரை சர்வே எண்.1801/1 சொத்துக்கள் தொடர்பான ஆவணங்கள் குறித்து எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். சம்பத்குமார் உயிருடன் இருக்கும்போது எழுதி கொடுத்த ஆவணத்தை அவர் இறந்த பின்னர் ஏதாவது துர்லாபம் அடையலாம் என்ற எண்ணத்தில் தற்போது இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

7) இந்த நிறைவேற்று மனுவானது நிலச்சுவான்தாரர்களுக்கும் வாடகைதாரர்களுக்கும் இடையே ஏற்பட்ட வழக்கு என்றால் இல்லை. 50 வருடமாக சர்வே எண்1801/1 சம்பத்குமார் பெயரில் இருந்தது என்பதற்கான ஆவணத்தை இந்த மனுவில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். சம்பத்குமார் உயிருடன் இருக்கும்போது மேற்கண்ட சொத்துக்களை விற்பனை செய்த பின்னர் அவரது வாரிசுதாரர்களுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல.

8) ம.சா.ஆ–2 ஆவணமானது 50 ஆண்டுகளுக்கு மேலான அவணத்தை எனக்கு ஆட்சேபணை செய்ய எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. எனக்கும் இந்த சொத்திற்கும் எந்தவித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
DN: cn=NATARAJAN AZHAGESAN, ou=THANJAVUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.01.23 17:31:16 +0530

District Munsif
Mannargudi.